[2006 ஜனவரி 16

(இ) திரு. கே.ஆர். நாராயணன், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஆர். நாராயணன், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"இந்தியத் திருநாட்டின் சிறந்த பாராட்டத்தக்க தலைவர்களில் ஒருவரும், இந்நாட்டில் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் பயின்று பட்டங்கள் பல பெற்ற சிறந்த கல்வியாளரும், கவிதை, கலை, இலக்கியம் ஆகியவற்றில் பேரார்வம் கொண்டவரும், கர்நாடக இசையைக் கற்றுத் தேர்ந்தவரும், இந்திய அயல்பணியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய வெளியுறவுத் தூதரகங்களில் பல முக்கியப் பதவிகளில் பணியாற்றியவரும், தனது ஓய்வு காலத்திற்குப்பின் அரசியலில் ஈடுபாடு கொண்டு 1985 முதல் 1992 வரை மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அரசில் அமைச்சராகவும் மற்றும் பல்வேறு அமைப்புகளில் உயர் பதவியை வகித்தவரும், 1992 முதல் 1997 வரை இந்தியக் குடியரசு துணைத் தலைவராகவும், 1997 முதல் 2002 வரை இந்தியக் குடியரசுத் தலைவராகவும் திகழ்ந்ததோடன்றி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற பெருமைக்குரியவரும், தனது பதவிக் காலத்தில் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கிணங்க நேர்மையுடனும், பாரபட்சமற்றவகையிலும் பணியாற்றியவருமான திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள், 9–11–2005 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பேரதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இப்பெருந்தகையின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இம்மாமனிதருக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2006 ஜனவரி 16] [பேரவைத் தலைவர்]

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை *(17–01–2006)* காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் *10–07* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS